

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி சார்பில் நடைபெற்ற "தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை நிகழ்ச்சியில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், கழக அயலக அணிச் செயலாளரும் முன்னாள் மக்களவை உறுப்பினருமான எம்.எம்.அப்துல்லா, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவருமான நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன் ஆகியோர் உரையாற்றினர். பகுதிக் கழகச் செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் திரு.சைதை சாதிக் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

### "தமிழ்நாடு தலைகுனியாது" – வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கிருஷ்ணராயபுரம் தொகுதி - பாலவிடுதியில் பிரச்சாரம்!

## ஏ.கே.எஸ்.விஜயன் சிறப்புரை!

கரூர், பிப்.3

"தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரை பிரமாண்ட போதுக்கூட்டம் கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதி பாலவிடுதியில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமை வகித்தார். கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாட்டின் உரிமைக்கான குரலை தரணியெங்கும் ஒலிக்கச் செய்யவும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் பறைசாற்றவும், நடைபெறும் #தமிழ்நாடு_தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி பாலவிடுதியில் நடைபெற்றது.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி வரவேற்றார், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் சிறப்புரையாற்றினார், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தலைமை வைத்து பேசினார் ஏ.கே.எஸ் விஜயன் பேசியதாவது:

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். இதை புரிந்து கொள்ளாமல் யார் யாரோ ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இங்கே செந்தில்பாலாஜி அவர்கள் அதனை பட்டியல் போட்டு சொன்னார்கள். கரூர் மாவட்டத்திற்கு மட்டும் ரூ.4500 கோடி மதிப்பீட்டில் திட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் வரவு செலவுத் திட்டமே இவ்வளவு 4,500 கோடி தான். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது சாணி பாலை குடித்து, சவுக்கடி வாங்கிக் கொண்டும் இருக்கிறோம். எங்களுக்கெல்லாம் வீட்டு மனை பட்டா வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்தார்கள். அப்போது உடனடியாக ஒரே கையெழுத்தில் 40 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கியவர் கலைஞர் அவர்கள். அவரது வழியில் நமது முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

கொரோனா காலத்தில் மக்களை பரிதவிக்க விட்டனர். மாநிலத்தில் இருந்த எடப்பாடி அரசும் ஒன்றும் செய்யவில்லை. ஒன்றிய மோடி அரசோ கைதட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள் என்று கூறிவிட்டு போய் விட்டனர். மக்கள் பெருந்தொற்றுக்கு பலியானார்கள். எனது உதவியாளர் கூட மருத்துவமனையில் இடம் கிடைக்காமல் இறந்து விட்டார். ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே கொரோனா வார்டுக்கே துணிச்சலுடன் சென்று நம்பிக்கை ஏற்படுத்தினார்கள். அதற்கு முன்னால் இருந்த எடப்பாடி அரசு செய்யாததை எல்லாம் செய்து காட்டினார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் உதவி தொகை, நிவாரணம் என அடுக்கடுக்கான திட்டங்களை வழங்கி மக்களை காப்பாற்றியவர் நமது முதலமைச்சர் அவர்கள். இதுதான் எடப்பாடிக்கும் நமது முதலமைச்சர் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயிரம் ரூபாய் மகளிர் உதவி தொகை என கழகம் கூறிய போது அதை நிறைவேற்ற முடியாத திட்டம் என்று கூறியவர் தான் எடப்பாடி.

கரூரில் கூட்டம் நடத்தி 40 பேர் இறந்த போது அனைவரும் ஓடிவிட்டனர். இங்கிருந்து உதவி அல்லவா செய்திருக்க வேண்டும். ஆனால் ஓடோடி சென்று மக்களை காப்பாற்றி உதவி செய்தவர் செந்தில் பாலாஜி. மனிதாபிமானத்தோடு கழகத்தினர் உதவி செய்தனர். முதலமைச்சர் அவர்கள் இரவோடு இரவாக கரூர் வந்து பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்கள். மருத்துவ வசதிகள், உதவி தொகைகள் என உடனடி நடவடிக்கையினை எடுத்தார்கள். அரசியலை பார்க்கவில்லை. மக்களைத்தான் பார்த்தார்கள்.

ஆனால் ஒருவர் சிபிஐ விசாரணைக்கு போய்விட்டு வந்து அமைதியாக ஆகிவிட்டார். சிபிஐ எப்படி விசாரணை நடத்துவார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். மக்களோடு இருப்பது கழகம் மட்டும் தான். மீண்டும் கழக ஆட்சி அமைதி உறுதி.

இவ்வாறு அவர் பேசினார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேசியதாவது:

கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து மாவட்டத்திற்கான திட்டங்களை கேட்டுப்பெற்று நிறைவேற்றி உள்ளோம். தேவையான திட்டங்களை அனைத்தையும் நிறைவேற்றி தந்தவர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். கரூர் மாவட்டத்திற்கு ரூ. 4500 கோடி மதிப்பீட்டில் திட்டங்களை வாரி வழங்கியவர் நமது முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள்.

இன்னும் என்னென்ன வேண்டும் என்று கேட்டால் அதையும் வழங்க தயாராக உள்ளார்கள். பெண்களுக்கு மாதம் ரூ.1000 கொடுக்க முடியாது என்று கூறி யவர் தான்எடப்பாடி பழனிசாமி. ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமை தொகையினை வழங்கி வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் விடுபட்டவர்களுக்கும் தந்துள்ளார்கள். இன்னும் மேல்முறையீடு செய்தவர்களுக்கும் வழங்குவார்கள். இது மகளிருக்கான அரசு. திராவிட மாடல் அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி மக்கள் நம்பிக்கையை பெற்றுள்ளது. மீண்டும் கழக ஆட்சி அமையும். மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

எம்எல்ஏ பிஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, தொகுதி பார்வையாளர் அம்பாள் நந்தகுமார், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், மாவட்டக் கழக நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்எஸ்கே. கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரிசுப்பிரமணி, பிவி.பாரத்,

செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் க.சுப்பிரமணியன், கோல்ட்ஸ்பாட் ஆர்எஸ். ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், எம். பாண்டியன், ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் எஸ்.சுதாகர், இ.ராமர், எம்எஸ். மணியன், கே.கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே. பாஸ்கரன், எம்.ராமலிங்கம், என்.மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி. முத்துக்குமாரசாமி, விகே. வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், அ. குணசேகரன், வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், விகேடி .ராஜ் கண்ணு, கே. வேலுச்சாமி, கே. சாமிநாதன், சி.கருப்பையா, பிபி. சரவணன், சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என். ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலவதி சக்திவேல், பிஏ.குமார், முன்னாள் எம்எல்ஏக்கள் காமராஜ், கீதா மணிவண்ணன்,

பேரூர் செயலாளர்கள் கே. அம்மையப்பன், கே.முரளிராஜா, இ. ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி, அணிகளின் அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், நந்தினி தேவி, தாசப்பிரகாஷ், சுப்பிரமணியன்,

தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ அப்பாசாமி, ஆர். தியாகராஜன், எம். பிரின்சி, சி.நவாஸ்கான், மா. அம்பிகாபதி, தம்பிசுதாகர், எம். விக்ரம், கு.வடிவேல், எஸ். செல்வராஜ், சாவிநல்லுசாமி, எஸ். மனோகர், எம்ஆர்எஸ்.சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர். அண்ணா வேலு, மற்றும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்துக் கொள்ள மிகச்சிறப்பாக நடை



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77, கே.பி.பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 46 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் உடற்பயிற்சிக் கூடத் திட்டப் பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கொளத்தூர் ரத்த சுத்திகரிப்பு நிலையம், ஏரிக்கரை பூங்கா!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.3

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (02.02.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "ஒருங்கிணைந்த வளாகம்" கட்டுமானப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் இன்று (03.02.2026) திறக்கப்படவுள்ள கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில், அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் "இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம்" முன்னேற் பாடு பணிகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்குபாதுகாக்கப்பட்ட குடிநீர், சீரான கழிவுநீர் வசதி, தடையில்லா மின்சாரம், ஆன்மீகப் பெருமக்கள் வழிபடும் திருத்தலங்கள், கிறிஸ்தவ, இஸ்லாமிய சிறுபான்மையினர் வழிபடும் தளங்கள், பொதுச் சாலைகள், தெருவிளக்குகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள், மருத்துவ சேவைகளுக்கான கட்டமைப்புகள் என— அனைத்து அடிப்படை வசதிகளையும் முழுமையாக நிறைவேற்றும் வகையில், முதல்வர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியை தன்னிறைவடைந்த, தமிழகத்திற்கு முன்மாதிரி யான தொகுதியாக மாற்றுவதற்கான பல திட்டங்களை தீட்டிக் கொண்டு செயல்படுத்தி வருகின்றார்.

வியாபாரிகள் மற்றும் தொழில் செய்பவர்களின் நலனை கருத்தில் கொண்டு பாலங்கள், வண்ண மீன் வர்த்தக மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 40-50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கழிவுநீர் அகற்று நிலையங்கள், 50-60 ஆண்டுகளுக்கு முன்பு பதிக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் இன்றைய தேவைக்கேற்ற வகையில் பெரிதுபடுத்தப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

அங்கன்வாடி கட்டிடங்கள், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் ரேஷன் கடைகள் ஆகியவை புதிய கட்டுமானங்களாகவும், பழைய கட்டி டங்கள் புனரமைக்கப் பட்டும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன. முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, இன்று டயாலிசிஸ் (இரத்த சுத்திகரிப்பு) மையம், செயற்கை கால் பொருத்தும் நிலையம், மற்றும் இன்றைய காலகட்டத்தின் முக்கிய மருத்துவ தேவையாக மாறியுள்ள பிசியோதெரபி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த டயாலிசிஸ் மையத்திற்கு வருபவர்களுக்கு முழுமையாக இலவச சிகிச்சையும், இலவச உணவும் வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார். நாளைய தினம் இந்த மையம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படுகிறது.

ஏற்கனவே, வானுயர்ந்த பெரியார் நகரில் முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பெரியார் பெயரில் புறநகர் மருத்துவமனை ஒன்றை உருவாக்கி தன் அடையாளமாக நிலைநிறுத்தியுள்ளார். அந்த பெரியார் நகர் மருத்துவமனைக்கு துணைபுரியும் வகையில் இந்த இரத்த சுத்திகரிப்பு மையம் செயல்படும்.

மேலும், இந்த மையத்தோடு இணைந்து செயற்கை கால் பொருத்தும் பிரிவு, பிசியோதெரபி மையம், இதே வளாகத்தில் அமைந்துள்ள ஆறு புதிய ரேஷன் கடைகள், ரெட் ஹில்ஸ் பகுதியை ஒட்டி அமைந்துள்ள 450 மீட்டர் நீளமுள்ள புனரமைக்கப் பட்ட பூங்கா ஆகிய அனைத்தையும் முதல்வர் அவர்கள் நாளை மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கின்றார்.

இந்த பணிகளை நிறைவேற்றுவதில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, , உறுப்பினர் செயலாளர் கோ. பிரகாஷ், துறையின் CEO அ.சிவஞானம், சென்னை மாநகர ஆணையாளர்ஜெ. குமரகுருபரன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ் குமார், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நாகராஜன், கழக முன்னோடிகள் சந்துரு, மகேஷ் உள்ளிட்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர். இந்த டயாலிசிஸ் மையம் ஏழை, எளிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆய்வுகளின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் வெங்கடேசன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, மண்டல அலுவலர் விஜய்பாபு மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி, அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்புரை!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கை!

திருவள்ளூர் பிப் 03:

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக சார்பில் கும்மிடிப்பூண்டி தொகுதிஎல்லாபுரம் வடக்கு ஒன்றியம் பெரியபாளையம் பகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் நாளை 04.02.2026 புதன் கிழமை மாலை 5 மணி அளவில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெறுகிறது எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம்ஜெ.மூர்த்தி ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் ஆ. சத்தியவேலு, டி.கே.சந்திரசேகர், கி.வேணு ஆனந்த், ஜான் பொன்னுசாமி, மு.மணி பாலன், ந.பரிமளம், அபிராமி குமரவேல், இரா.அறிவழகன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்

மாவட்ட கழக நிர்வாகிகள் மு.பகலவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு.கதிரவன், எம். எல். ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாஜலபதி, பா.செ. குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், சிவாஜி, டில்லி சங்கர், யமுனா அப்புன், ரவி, சண்முகம், சிவசங்கர், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

இந்நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி, தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு கழக செய்த சாதனைகளை விளக்கி பேருரை ஆற்றுகிறார்கள்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜன் எம்எல்ஏ, இ.ஏ.பி. சிவாஜி, மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச். சேகர்தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ், கவி கணேசன், மாநில நிர்வாகிகள்கேஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ராபர்ட்ராஜதுரை, ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் நா.செல்வசேகரன், மு.முரளிதரன் , ஆ.ராஜா, வே.ஆனந்த குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், கா.சு.ஜெகதீசன், ஜி. ரவிக்குமார், பி.முத்து, க.சு. தமிழ் உதயன், அப்துல் ரஷீத், ருக்மணிமோகன்ராஜ் , சசிகலா அறிவழகன், குமரவேல் , எம்.கேசவன், அலெக்சாண்டர் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி. லோகேஷ், வெற்றி (எ) ராஜேஷ், .கிருஷ்ணமூர்த்தி,



ஜி.பி.வெங்கடேசன், கா.சம்பத், அ.முகம்மது அலவி, எஸ். கோபி. எம்.ஆர்.ஸ்ரீதர் .கே. சம்பத்குமார், ரேம்பொன்னையன், பா.தனசேகர், மு. பாஸ்கரன். கே.ஆறுமுகம், வி.பி.ரவிக்குமார், Dr.நி.வில்சன் மு.தினகரன். ஜி.சுமன், ஜி.ரமேஷ், டி.மணி. கே. ராஜேஷ். தேசராணிதேசப்பன் ஜெயலலிதாசசிதரன், பி.மணிகண்டன். மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் கழக முன்னோடிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கிளைக் கழக வார்டு கழக செயலாளர்கள் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள் நிர்வாகிகள் தனசேகரன், சீனிவாசன், முகமது மைதீன், சித்ரா முனுசாமி, பாபு ,எம்.டி.ஜி.கார்த்திக் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்

நிகழ்ச்சி முன்னதாக நாளை பெரியப்பாளையம் L. k. S. திருமணம் மண்டம் மாலை 4 மணிக்கு திரு வள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது இளைஞர்கள் மாணவர்கள் தன்னார்வ அமைப்புகள் தொழிற்சங்க தொழில் முனைவர் கல்வியாளர்கள் விவசாய சங்கங்கள் வியாபாரி சங்கங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சமூக நல்லிணக்க பிரதிநிதிகள் ஆகியோர் எதிர்பார்ப்பு கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் மற்றும் கழக மூத்த முன்னோடிகளின் அவரவர் இல்லங்களுக்கே சென்று மரியாதை செய்வித்தல் தலைவர்களின் சிலைகளுக்கு, மாலை அணிவிக்கும் நிகழ்வும் நடைபெறுகிறது என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## மாதவரம் வடக்கு பகுதி கழகத்தினருக்கு புழல் எம், நாராயணன் வேண்டுகோள்!

மாதவரம், பிப்.3-

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு வாலாஜா சாலையில் நடைபெறும் அமைதி ஊர்வலத்தில் மாதவரம் வடக்கு பகுதி திமுகவினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட பேரரசர், அன்பு அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் அமைதி ஊர்வலம்,

நாளை 3/ 2 /2026 செவ்வாய் காலை 7 மணிக்கு வாலாஜா சாலையிலிருந்து புறப்பட்டு அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் அண்ணன் ஆ. ராசா எம்பி மற்றும் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ ஆகியோர் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் என அனைவரும் தவறாமல் அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் . இவ்வாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்டம் பாகம் எண் 276 க்கான பாக உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு முன்னிலையில், வட்டத் துணைச் செயலாளர் பாக முகவர் வக்கீல் டி. ராஜாராம் தலைமையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி, பாகத்திற்குட்பட்ட 50 மகளிருக்கு சேலைகள் வழங்கினார். நிர்வாகிகள் மு. விக்னேஸ்வரன், எச். பீர்முகமது, க. யுவராஜ், ராஜேஸ்வரி, சகிலா, மகேந்திரன் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.